Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 22, 2021

திங்கட்கிழமை நவம்பர் 22, 2021 | ஒளி: 07 கதிர் 159 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## தங்கவிலை குறைந்தது



உலகச் சந்தையில் தங்கத்தின் விலை குறைந்துள்ளது. அதனடிப்படையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1,846 ஐக்கிய அமெரிக்க டொலராகும்.

ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை, கடந்த வாரம் 1,861.10 ஐக்கிய அமெரிக்க டொலராக இருந்தது.

---

கனேடிய கூட்டத்தில்

# சுமந்திரன், சாணக்கியனுக்கு கடும் எதிர்ப்பு

### ‘சுமந்திரன் தமிழினத் துரோகி;‘ ‘சிங்கள தேசபக்தர்” என பதாகை







தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் கலந்துகொண்ட, கனடாவின் டொரோன்டோவில் இடம்பெற்ற கூட்டத்தில் இடையூறு விளைவிக்கப்பட்டு, பதற்றநிலை ஏற்பட்டிருந்தாக கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழ் மக்களுக்கான தனிநாடு கோரியும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்கும் தமிழ்க் கட்சியின் முயற்சியை நிராகரித்துமே நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்ற இந்தக் கூட்டத்துக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. தொடர்ச்சி P2

---

“ஒரே நாடு, ஒரே சட்டம்” செயலணியின் கருத்து அறியும் பணி

# வடக்கில் ஆரம்பம்

### நேற்று யாழில், கிளி. முல்லையில் இன்று



“ஒரே நாடு, ஒரே சட்டம்” தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள், வவுனியாவில் ஆரம்பமாகியிருந்த நிலையில், யாழ்ப்பாணம், வலம்புரி மண்டபத்தில் நேற்யை தினமும் (21) இதற்கான பணிகள் தொடர்ந்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

சட்டத்தரணிகள், தொழில் வல்லுநர்கள், மதத் தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சட்டத்தை சம அளவில் தொடர்ச்சி P2

---

மாவீரர் வாரம் ஆரம்பம்

# கெடுபிடிகள் தீவிரம்

■ சண்முகம் தவசீலன்



மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில், முல்லைத்தீவில் மாவட்டத்தில் முப்படைகளாலும் பாதுகாப்பு கெடுபிடிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், வீதிச் சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன. மாவீரர் துயிலுமில்ல வளாகங்களை சூழவும் இராணுவம் மற்றும் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து தொடர்ச்சி P2

---



## நீதிமன்றில் முன்னிலையாக நிரோஷ்’க்கு உத்தரவு

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை, இன்று திங்கட்கிழமை (22) காலை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

---

நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த

## சாணக்கியன் உள்ளிட்ட எழுவருக்கு தடை

■ ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம்.நூர்தீன்

கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் உட்பட ஏழு பேருக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

---

# அரசாங்கத்தின் கொள்கையை அரச ஊழியர்கள் விமர்சிக்கக் கூடாது

அரச மற்றும் அரசாங்கத்தின் கொள்கையை விமர்சனம் செய்யவேண்டாமென்ற கட்டளை, அரச ஊழியர்களுக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதென செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் கொள்கை மற்றும் செயற்பாடுகள் சமூக ஊடகங்களின் ஊடாக விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. அவற்றை அரச ஊழியர்களே முன்னெடுத்துவருகின்றனர் என குற்றச்சாட்டப்பட்டுள்ளது. அந்தக் குற்றச்சாட்டுகளை அடுத்தே, மேற்கண்டவாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## 29 முதல் அரச பணிகள் முடங்கும்

தங்களது சம்பளத்தை அதிகரிக்காவிட்டால், எதிர்வரும் 29ஆம் திகதியிலிருந்து அரச பணியாளர்கள் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபடுவர் என, தொடர்ச்சி P2

---

## இறக்குமதி விலைகளை எம்மால் தீர்மானிக்க முடியாது

வரலாற்றில் என்றுமில்லாதவாறு பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளோம் என தெரிவித்த வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளை எம்மால் தீர்மானிக்க முடியாது. விரும்பினாலும், விரும்பாவிடினும் சர்வதேச விலைக்கு அமைய அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார். தொடர்ச்சி P2

---

## பட்ஜெட்டுக்கு ஆதரவாக நான் வாக்களிப்பேன்

### அரசியல் அடிமை தானல்ல என்கிறார் விஜயதாச

■ சேஹ்ன் செனவிரத்ன



2022ஆம் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாகத் தெரிவித்த ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ, பட்ஜெட் எவ்வளவு பலவீனமாக காணப்பட்டாலும் அரச சேவைகள் செயற்படுத்தப்படவேண்டும் என்றார். தொடர்ச்சி P2

---



## இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய அனுமதி

நல்ல தரநிலையில் இருக்கும் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விவசாய நிபுணர்கள் உள்ளிட்ட குழுவினரால், ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட விவசாய அடிப்படையிலான திட்டத்தின் பிரகாரமே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

---

## 9.2 சதவீதமானோருக்கு தொழில் வாய்ப்பில்லை

இலங்கையில் 25 மற்றும் 29 வயதுக்கு உட்பட்டவர்களில், 9.2 சதவீதமானவர்கள் தொழில் வாய்ப்பின்றி இருப்பதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் கற்றவர்களில் 7.2 சதவீதமானவர்கள் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். தொடர்ச்சி P2

---

## அபிவிருத்திகள் தேர்தலை இலக்காக கொண்டவையல்ல



அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அரசாங்க மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், தேர்தலை இலக்காக கொண்டுள்ளதென சிலர் குற்றம் சுமத்தினாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வருடங்களும் பத்து மாதங்களும் உள்ளன என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நினைவூட்டினார்.

கண்டியில் நேற்று (21) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது, இரண்டு வருடங்களின் பின்னர் தொடர்ச்சி P2

---

## விரக்தியடைந்த இளைஞர்களே நீண்ட வரிசையில் நிற்கின்றனர்



இந்நாட்டில் வாழ்வதற்கு இளைஞர்கள் விரும்பவில்லை எனவும் விரக்தியடைந்துள்ளனர் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அதனால்தான் கடவுச்சீட்டுகளுக்கான நீண்ட வரிசைகளை காணக் கூடியதாகவுள்ளது என்றும் தெரிவித்தார்.

“சமகி விஹிதும்” படையணியை நேற்று (21) ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாட்டை நேசிக்கும் இளம் தலைமுறையினர், எதைப்பற்றியும் சிந்திக்க முடியாமல், ஆதரவற்ற நிலையில் இருக்கின்றனர் எனத் தெரிவித்த தொடர்ச்சி P2

---

ஜனாதிபதி அலுவலகத்தில் பணியாற்றுவோர்

# வாகனத் தொடரணியை பயன்படுத்துவதில்லை



ஜனாதிபதி உள்ளிட்ட ஜனாதிபதி அலுவலகத்தில் சேவை புரிகின்ற எந்தவோர் அதிகாரியும் வாகனத் தொடரணியைப் பயன்படுத்துவதில்லை என்பதை பொறுப்புடன் கூற வேண்டுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதேபோன்று, அதிகாரிகள் தமது பதவிக்குரிய வாகனத்தைக்கூட பயன்படுத்தாது, கடமைக்கு ஏற்ற வகையில் பட்டியலில் உள்ள வாகனங்களையே குறித்த கடமையை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றனர் என்றும் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சுமந்திரன், சாணக்கியனுக்கு கடும் எதிர்ப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - கனடா ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில், வெளியே கூடி நின்ற எதிர்ப்பாளர்கள் மண்டபத்துக்குள் புகுந்து நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளனர்.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகிய இருவரும் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்துள்ளனர்.

இலங்கையின் தமிழ் சிறுபான்மையினருக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கான இராஜதந்திர முயற்சிகள் தொடர்பில், டொரோன்டோவில் உள்ள தமிழ் சமூக உறுப்பினர்களுக்கு விளக்கமளிப்பதற்காக இந்த சந்திப்பு அமைந்திருந்தது.

போராட்டக்காரர்கள், கூட்டம் இடம்பெற்ற மண்டபத்துக்குள் நுழைந்து அமளியில் ஈடுபட்டதையடுத்து, டொரோன்டோ பொலிஸார் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் தீர்வை விரும்பவில்லை என்றும், தமிழ் தேசிய பிரச்சினைக்கு தனியான தமிழீழ நாடு ஒன்றே தீர்வு என்றும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இலங்கையில் சிங்கள மக்களுடன் வாழ விரும்பும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் "சிங்கள தேசபக்தர்" என்றும் "சுமந்திரன் தமிழினத் துரோகி" என்றும் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

சுமந்திரன் தலைமையிலான கூட்டமைப்பின் தூதுக்குழு, கடந்த வாரம் வொஷிங்டனிலுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு விளக்கமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் ஆரம்பம்

செயற்படுத்துவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் கருத்துக்களை கேட்டறிவது, இந்த ஜனாதிபதி செயலணியின் நோக்கமாக உள்ளது.

இன்றையதினம் (22), முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள் தொடரவுள்ளதுடன், எதிர்வரும் நாட்களில் ஏனைய எட்டு மாகாணங்களிலும் உள்ள மக்களின் கருத்துக்களை கேட்டறிய எதிர்பார்த்துள்ளதாக செயலணி அறிவித்துள்ளது என்றும் ஊடகப்பிரிவு அறிவித்தது.

அப்பிரிவின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

"ஒரே நாடு, ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறியும் பணிகள், நேற்றுமுன்தினம் (20) வவுனியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

வவுனியா போகஸ்வெவ பகுதியில் அமைந்துள்ள "வட மாகாண சேதனப் பசளை உற்பத்தியாளர்கள் சங்கம்" அலுவலகத்திலும் வவுனியா மாவட்டச் செயலகத்திலும் இவ்வாறு கருத்துக்களை கேட்டறியும் பணிகள் இடம்பெற்றன.

குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வந்திருந்தவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

நீண்டகாலமாகத் தங்களது மனங்களில் இருந்த எண்ணங்களை இதன்போது அவர்கள் செயலணியிடம் வெளிப்படுத்தினர். அத்துடன், இவ்வாறானதொரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டனர்த ங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த பொதுமக்களுக்கு ஜனாதிபதி செயலணியின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரர் பாராட்டியதோடு, "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்பதன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

பேராசிரியர் ஷாந்தி நந்தன வீரசிங்க, அய்யம்பிள்ளை ஆனந்த ராஜா உள்ளிட்ட செயலணியின் உறுப்பினர்கள், செயலணியின் செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளருமான ஜீவந்தி சேனாநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கைக்குள் "ஒரே நாடு, ஒரே சட்டம்" என்ற எண்ணக்கருவை செயற்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினர் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் கருத்துகளைக் கருத்திற்கொண்டு, செயலணியின் நோக்கத்துக்கமைய அவற்றை ஆராய்ந்த பின்னர், அதன் அடிப்படையில் இலங்கைக்கு ஏற்ற வகையில் செயற்திட்ட வரைபு ஒன்றைத் தயாரிப்பதற்காக, 2021 நவம்பர் 30ஆம் திகதியன்று இந்தச் செயலணி உருவாக்கப்பட்டது.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணி, த.பெ. எண். 504, கொழும்பு. என்ற முகவரிக்கு அல்லது ocol.consultations@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, உங்களுடைய கருத்துக்கள் மற்றும் யோசனைகளை அனுப்பி வைக்க முடியும்.

நேற்று முதல், தனிப்பட்ட முறையிலும் இச்செயலணிக்கு கருத்துகளைத் தெரிவிக்க முடியும் என்று செயலாளர் அறிவித்துள்ளார்.

# கெடுபிடிகள் தீவிரம்

வீரகாவியமான வீரமறவர்கள் நினைவாக வருடம் தோறும் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி மாவீரர் நாள் உலகமெங்கும் வாழும் தமிழ் உறவுகளால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது கார்த்திகை 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரமாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. இதனிடையே இம்முறையும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம் பெறுவதாக தெரிவித்து அதற்கான தடையுத்தரவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

# அரசாங்கத்தின் கொள்கையை அரச ஊழியர்கள் விமர்சிக்கக் கூடாது

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக பிறப்பிக்கப்பட்டுள்ள அந்த கட்டளையை மீறினால், ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அரச ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகிறது.

பிரதேச செயலாளர்கள், அபிவிருந்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், உள்ளிட்டவர்களே அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சனத்துக்கு உட்படுத்தினர் என்றும் அவ்வமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நிறுவனங்களின் சட்டத்தின்படி, அரச ஊழியர்கள், அரசாங்கத்தை விமர்சனம் செய்யமுடியாது. அவ்வாறு செய்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைளை விமர்சிக்கும் அரச ஊழியர்கள் தொடர்பிலான முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. என்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிராம சேவகர்களுக்கு எதிரான முறைப்பாடுகளே அதிகமாகுமென அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 29 முதல் அரச பணிகள் முடங்கும்

இலங்கை அரச பணியாளர்கள் தொழிற்சங்க சம்மேளனம் எச்சரித்துள்ளது.

அந்த சம்மேளனத்தின் தலைவரால் இது தொடர்பில் கடந்த 13ஆம் திகதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளதாகவும் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இம்முறை பட்ஜெட்டில், அரச பணியாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அதனால் அரச பணியாளர்கள் கடும் பொருளாதார பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டி, கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, அவர்கள் குறித்து கவனம் செலுத்தி, மாதாந்தம் அவர்களது சம்பளத்தை 16,000 ரூபாயாகவும் கொடுப்பனவு அல்லது சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அபிவிருத்திகள் தேர்தலை இலக்காக கொண்டவையல்ல

நடைபெறவுள்ள தேர்தலில் வெற்றி பெறுவது தொடர்பில் எவ்வித சிக்கல்களும் இல்லையெனத் தெரிவித்த அவர், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றார்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக சுற்றுலாத்துறை முடங்கியதால், சுற்றுலாத்துறையினர் நாட்டுக்கு வருகை தரவில்லை என்றும் இதனால் 4.2 டொலர் பில்லியன் வருமானத்தை இலங்கை இழந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

எனினும், கடந்த மாதங்களில் 19,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பணியாளர்களின் வருமானமும் தொற்றால் இழக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நலன்புரி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு இடையில் ஒப்பீட்டு ரீதியிலான பட்ஜெட்டை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், பொதுநலவாய நாடுகளிடம் இலங்கை நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், இந்து சமுத்திர வலயம் தொடர்பான சர்வதேச சம்மேளனத்தில் உப- தலைவர் பதவியும் இலங்கைக்கு கிடைத்துள்ளது என்றார்.

# நீதிமன்றில் முன்னிலையாக...

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட அந்த உத்தரவு, அச்சுவேலி பொலிஸாரினால், நிரோஷிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினம் தொடர்பில் நீதிமன்றங்களினால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வரும் நிலையில், மாவீரர் தினம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டே இந்த உத்தரவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவீரர் தினம் மற்றும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்களில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரின் நினைவேந்தல் சுதந்திரத்துக்கு எதிராக பொலிஸார் வழக்குகளைத் தாக்கல் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், உப- தவிசாளர் கபிலனின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாணக்கியன் உள்ளிட்ட எழுவருக்கு தடை

பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் கோ.கருணாகரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர், த.சுரேஷ் முன்னாள் போராளிகளான நடராசா சுரேஸ், தம்பித்துரை கஜேந்திரன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் சீ.புஷ்பலிங்கம் ஆகியோருக்கே இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக குறித்த நபர்கள் 20ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 9.2 சதவீதமானோருக்கு தொழில் வாய்ப்பில்லை

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர உயர் தரம் மற்றும் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்களில் 9.1 சதவீதமானவர்கள், தொழில் வாய்ப்பு இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களின் படி, நான்கு பேரைக் கொண்ட ஒரு குடும்பத்தின் உணவு தேவைகளுக்காக மாத்திரம் மாதமொன்றுக்கு 44,020 ரூபாய் தேவைப்படுகிறது.

இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் தொழில்வாய்ப்பின்மை பிரச்சினை மேலும் உக்கிரமடைந்துள்ளது என அறியமுடிகிறது. ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளனர்.

இதேவேளை, அரச ஊழியர்கள் எவரும் அடுத்தவருடம் இணைத்துக் கொள்ளப்படமாட்டார்கள் என அரசாங்கம் அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்க முடியுமான பல தொழிற்சாலைகள் வடக்கில் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் காரணமாக யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை, சீமெந்து தொழிற்சாலை முற்றாக செயலிழந்தது.

சுமார் 29 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கும் இந்த தொழிற்சாலை சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மூடப்பட்டதையடுத்து, சுமார் 1,500 ஊழியர்கள் வேலை இழந்து நிர்க்கதியாகினர்.

முல்லைத்தீவு-ஒட்டுச்சுட்டான், பண்டாரவன்னியன் ஒட்டுத்தொழிற்சாலை 1968 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதின்று திறந்து வைக்கப்பட்டது.

# இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய அனுமதி

அதன்படி, நாட்டுக்குத் தேவையான அனைத்து தரமான, பரிந்துரைக்கப்பட்ட உரங்களும் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், அவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான துரித ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என, விவசாய அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் உதித் கே. ஜயசிங்ஹ தெரிவித்தார்.

யூரியா உள்ளிட்ட இனங்காணப்பட்ட இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன என்றும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அதிகாரங்களுக்கு அமைவாகவே இந்த அனுமதி வழங்கப்படுவதாக தெரிவித்துள்ள விவசாய அமைச்சின் செயலாளர், பெரும்போகத்தில் பயிரிடப்படும் நெல், சோளம் மற்றும் மரக்கறிகளுக்கு இந்த உரங்கள் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# இறக்குமதி விலைகளை எம்மால் தீர்மானிக்க முடியாது

ஹிக்கடுவ பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா தாக்கத்தினால் பூகோள பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவினால் விளங்கிக் கொள்ள முடியாது என தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து, எரிபொருளின் விலை சடுதியாக குறைவடைந்தது. அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குறைவடைந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

# பட்ஜெட்டுக்கு ஆதரவாக நான் வாக்களிப்பேன்

பட்ஜெட்டை தோற்கடிக்க வேண்டுமாயின் மாற்று அரசாங்கம் ஆட்சியமைக்க தயாராக இருக்க வேண்டும் . அவ்வாறு இல்லையென்றால் பட்ஜெட் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அரச சேவைகள் வீழ்ச்சியடையும் என்றார்.

தலதா மாளிகைக்கு நேற்று முன்தினம் (20) விஜயம் செய்திருந்த அவர், வழிபாட்டுகளின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்த அரசாங்கத்தை வீட்டுக்குத் துரத்திவிட்டு, புதிய அரசாங்கத்தை உருவாக்குவதே பலரது எதிர்பார்ப்பாகக் காணப்பட்டாலும் நிரந்த வேலைத்திட்டம் ஒன்று இன்மை காரணமாக, அதற்கு சில காலம் செல்லும் என்றும், ஆனால் தற்போது செல்லும் முறையில் அது மிக விரைவாக நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

ஒரு நாட்டின் வருமானத்தை இலக்காக வைத்து, அரசின் வருமானம் எப்படி செலவு செய்யப்படுகிறது என்பதை அடிப்படையாக வைத்தே பட்ஜெட்டின் தேவை காணப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

# விரக்தியடைந்த இளைஞர்களே...

அவர், இளைஞர்களின் அமைதியின்மை தொடர்பில் ஆணைக்குழு அறிக்கையில் பல பரிந்துரைகள் இருந்த போதிலும் அதில் பல பரிந்துரைகள் இன்று மீறப்பட்டுள்ளன என குறிப்பிட்டார்.

அறிவு, உண்மை, அறிவியல் மற்றும் தரவுகளின் அடிப்படையிலான யதார்த்தமான தீர்வுகள் நாட்டுக்குத் தேவை என்றும் பாரம்பரியம், நவீனம் என்பவற்றிலிருந்து விலகி, அரசியலுக்குப் பதிலாக நாட்டுக்கு சேவையாற்ற வேண்டிய காலம் வந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

நாட்டுக்கு நன்மதிப்பை கொண்டு வருவதே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை எனவும் அதற்காக, எந்தவொரு எதிர்க்கட்சியும் செய்யாத பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் ஒரேயொரு போராட்டமே, அரசாங்கத்தின் உரம் தொடர்பான தீர்மானத்தில் முன்வைத்த காலை பின்வைக்க வைத்துள்ளது என்றால், 300 போராட்டங்களை நடத்தினால் அரசாங்கம் முழுமையாக பின்னடைவை சந்தித்து விடும் என்றார்.

# வாகனத் தொடரணியை...

ஜனாதிபதி அலுவலகத்தில் சேவை புரிகின்ற அதிகாரிகள் வாகனத் தொடரணியியை பயன்படுத்துகின்றனர் என ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

அதுதொடர்பில், ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அந்த அறிக்கையில்,

"கடந்த இரண்டு வருடகால ஆட்சிக் காலத்தில், சவால்களுக்கு மத்தியில் குறைவான வளப் பயன்பாட்டுடன் பாரிய வேலைத்திட்டங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடைமுறைப்படுத்தி வருகின்றார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் செயற்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் உள்ளிட்ட பாரிய வேலைத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தும் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள முழுமையான ஊழியர்கள் மற்றும் வாகன எண்ணிக்கை என்பன, நல்லாட்சிக் காலத்திலிருந்த ஊழியர் மற்றும் வாகன எண்ணிக்கையில் மூன்றில் ஒரு (1/3) பகுதியாகுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

விடயம் இவ்வாறு இருக்கும்போது, சரியான தகவல்கள் அல்லது தரவுகளை ஆய்வு செய்யாமல், ஜனாதிபதி அலுவலகத்தின் வாகனப் பயன்பாடு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, கடந்த 19ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட விடயங்கள் உண்மைக்குப் புறம்பானதும் சரிவர ஆய்வு செய்யாமலும் முன்வைக்கப்பட்டவை என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவியை இருட்டறையில் அடைத்து வைத்திருந்தனர்

அண்மையில் கைது செய்யப்பட்டிருந்த தனது மனைவியை சிறைச்சாலையில் உள்ள இருட்டறையில் அடைத்து வைத்திருந்ததாக தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரிஷாட் பதியூதீன், ஆளுங்கட்சி உறுப்பினரின் மனைவி கைது செய்யப்பட்டிருந்தால், அவர்களையும் இருட்டறையில் அடைப்பீர்களா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

நிந்தவூரில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நான் கைது செய்யப்பட்டிருந்தேன். என்னை கைது செய்ய வந்த அதிகாரிளிடம் நான் கேட்ட எந்தவொரு கேள்விக்கும் அவர்களிடமிருந்து பதில் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

நான், வரமுடியாது என்று கூறியபோதும் அவர்கள் என்னை தூக்கிச் செல்வேன் என அச்சுறுத்தினார்கள். பெரிய குற்றம் செய்தவரை கண்டுபிடிப்பதுபோல என்னை கைது செய்தார்கள. யாரை திருப்திப்படுத்த என்னை கைது செய்தார்கள் என்று தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு துணைபோனதாகக் கூறி என்னை தடுத்து வைத்திருந்தார்கள். எனது சகோதரரையும் இதே குற்றச்சாட்டில் கைது செய்திருந்தார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் தொடர் கோரிக்கைகளால் நான் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள முடிந்தது எனவும் தெரிவித்தார்.



பாராளுமன்ற அலுவலகத்தில் உள்ள எனது அறையில் என்னை எனது கட்சி எம்.பிகள் சந்தித்து, உங்களின் விடுதலை தொடர்பில் அரசாங்கத்துடன் பேச வேண்டுமா? எனக் கேட்டார்கள். எனது விடுதலைக்காக அரசாங்கத்தோடு பேச வேண்டாம். இதனை காரணமாக வைத்து அரசாங்கம் கொண்டுவரும் அனைத்து சட்டங்களுக்கும் உங்களை கையை உயர்த்த சொல்வார்கள் எனவும் தான் அப்போது கூறியதாக தெரிவித்தார்.

எந்தவொரு தவறும் செய்யாத எனது மனைவி கைது செய்யப்பட்டார். எனது மனைவி நோன்பு திறப்பதற்கு கூட சிறைச்சாலையில் உள்ள அதிகாரிகள் தண்ணீர் வழங்கவில்லை. மனைவியை இருட்டறையில் அடைத்து வைத்திருந்தனர். இதனை பார்த்த ஏனைய சிறை கைதிகள் அங்கிருந்த அதிகாரிகளுடன் சண்டையிட்டனர் எனவும் தெரிவித்தார்.

ஆளுங்கட்சியின் எம்.பி ஒருவரின் மனைவி கைது செய்யப்பட்டிருந்தால் இவ்வாறு அவர்களையும் நடத்தியிருப்பார்களா? எனவும், என்னுடைய மாமானார் ஒரு சிறந்த வியாபாரி அவருக்கு 71 வயது அவரையும் சிறையில் அடைத்தார்கள்.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமையையும், இன்னொரு யுத்தம் நடைபெறக்கூடாது என இந்த அரசாங்கம் நினைத்திருந்தால், ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவராக ஞானசார தேரரரை அரசாங்கம் நியமித்திருக்காது எனவும் தெரிவித்தார்.

# 20க்கு உயர்த்தியதை போலவே ஆதரவாக கையை உயர்த்துவேன்

## ரிஷாட் கட்சி எம்.பி அறிவிப்பு

■ ரஸீன் ரஸ்மின்



2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கபோவதாக ரிஷாட் பதியூதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான அலிசப்ரி ரஹீம் அறிவித்துள்ளார்.

புத்தளம் தில்லையடி பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று (21) பார்வையிட வருகை தந்த போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில், மேலும் தெரிவித்த அவர், கொரோனா தொற்று காரணமாக எமது நாடு பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது. டொலர் இல்லாத பிரச்சினையோடு, பொருளாதார ரீதியாக எமது நாடு நளிவடைந்துள்ளது.

சவால் மிக்க இந்த கால கட்டத்திலும், பொருளாதார நெருக்கடிகளுக்கும் மத்தியில் எமது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் மக்களுக்கு நிவாரணம் அடங்கிய பட்ஜெட் பொதியை வழங்கியிருக்கிறார்கள்.

எனவே, 20 ஆவது திருத்த சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்கியதைப் போலவே, 2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்துக்கும் ஆதரவாக வாக்களிப்பேன் என்றார்.

### வரவு– செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீது

# இன்று வாக்கெடுப்பு



2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று (22) மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, இம்மாதம் 12ஆம் திகதி வரவு -செலவு திட்டத்தை சபையில் சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி, கடந்த 13ஆம் திகதி முதல் வரவு- செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் ஆரம்பமான நிலையில், இன்றுடன் 8 நாட்களாக நடைபெறும் விவாதம் இன்று ( 22) மாலையுடன் நிறைவடைகிறது.

வரவு- செலவுத் திட்டத்தின் அடுத்தக்கட்டமாக நாளை (13) முதல் குழுநிலை விவாதம் ஆரம்பமாக உள்ளதோடு, டிசெம்பர் 10ஆம் திகதி வரையில் 16 நாள்கள் விவாதிக்கப்பட உள்ளது.

# மர்மமான முறையில் உயிரிழந்தவரின் சடலம் மீட்பு

அநுராதபுரம் ஹோட்டலில் மர்மமான முறையில் உயிரிழந்த 35வயதான நபர் தொடர்பான விசாரணைகளை அநுராதபுர பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் கிரிந்திவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதோடு, சடலம் தொடர்பில் நீதவான் விசாரணைகள், பிரேத பரிசோதனைகள் நேற்று (21) இடம்பெற்றிருந்தன.

சடலமாக மீட்கப்பட்டுள்ள நபரின் உயிரிழப்பு சந்தேகத்துக்குரியது என தெரிவிக்கும் பொலிஸார், குறித்த நபர் தற்கொலை செய்துகொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டுள்ளாரா? என்பது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# 50 நாட்களில் 64 டெங்கு நோயாளர்கள்

■ துஷித குமார டி சில்வா

பேருவளையில் கடந்த 50 நாட்களில் மாத்திரம் 64 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டள்ளதாக அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

பேருவளை நகரசபைக்கு உட்பட்ட மஹகொட, மரதான பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மக்கொன, கெந்தகஹவில ஆகிய பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய 13 இடங்கள் அடையாளங்காணப்பட்டு, அந்த இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை போல டெங்கு நுளம்ப பரவக்கூடிய இடங்கள் அடையாளங்காணப்பட்டு புகைவிசிறும், மருந்து அடிக்கும் செயற்பாடுகளும் தொடர்ந்து அப்பிரதேச சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.







# கண்டிக்கு விஜயம்

கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியூதீன், கண்டி, திகன கலவரத்தின் போது தாக்குதலுக்குள்ளாகி, முற்றாக சேதமடைந்து, புனரமைப்பு செய்யப்பட்ட திகண,கெங்கல்ல மஸ்ஜிதுல் லாபிர் ஜும்மா பள்ளிவாசலுக்கு, வெள்ளிக்கிழமை (18) சென்று பார்வையிட்டு, தொழுகையிலும் ஈடுபட்டார்.

### திறைசேரிக்கு அறிவிக்காது

# 4 திட்டங்களுக்கு நேரடி வெளிநட்டு நிதியுதவி

## கோபா குழுவில் அம்பலம்

திறைசேரிக்கு அறிவிக்காமல் நான்கு திட்டங்களுக்கு நேரடி வெளிநாட்டு நிதியுதவிகள் செலவு செய்யப்பட்டுள்ளதை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் கண்டறிந்துள்ளது.

2017, 2018 மற்றும் 2019 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து ஆராய்வதற்காக சுற்றாடல் துறை அமைச்சின் அதிகாரிகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு அழைக்கப்பட்டபோதே இது குறித்த தகவல்கள் வெளியாகின.

9.9 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மூன்று திட்டங்கள் மற்றும் 1.86 மில்லியன் யூரோ பெறுமதியான திட்டங்களே இவ்வாறு நேரடி நிதியுதவியின் கீழ் முன்னெடுக்கப்படுவதாக அறியப்பட்டிருந்தது. எனினும், இத்திட்டங்கள் குறித்து வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### சுமந்திரனின் சட்டப்புலமை

# ‘தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக்கொடுக்கவில்லை’

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் சட்டப்புலமை தமிழ் மக்களுக்கு எதையும் பெற்றுக்கொடுத்திருக்கவில்லை எனத தெரிவித்த வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், அறைகளுக்குள் விளக்கேற்றி, படங்களை பிரசுரிப்பதை விடுத்து, பொது வெளிக்கு வர வேண்டும் எனவும் கூறினார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில், நேற்று (21) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், நம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை மாவீரர் தினம் எனவும் அதேபோல மே 18ஆம் திகதி பொதுமக்களுக்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எனவும் தற்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் இந்த இரண்டு நிகழ்வுகளையும் தடுத்து வந்திருக்கின்ற நிலையில், கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முதல்நாள் சடுதியாக அந்த ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா தொற்று ஏற்ப்டுள்ளதாக செய்தியை கொண்டுவந்தார்கள் எனவும் கூறினார்.

### விவசாயிகளால் தெரிவு செய்யப்பட்வர்களே

# விவசாயிகளுக்கு எதிராக செயற்படுகிறார்கள்

விவசாயிகளால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்களே, விவசாயிகளுக்கு எதிரான தீர்மானத்தை எடுக்கிறார்கள் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், உர பிரச்சினையால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை பார்க்க வேண்டும். உள்நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட உரத்தை ஏற்றிவந்த கப்பல் திரும்பிச் சென்று மீண்டும் இலங்கை முழுவதிலும் சுற்றி வருகிறது எனவும், தற்போதைய அரசாங்கம் வீரமான அரசாங்கம் எனவும் கேலி செய்தார்.

நனோ நைட்ரிஜன் உரத்தை இறக்குமதி செய்வதாக கூறுகிறார்கள். நிபுணர்களின் ஆலோசனைகளை இந்த விடயத்திலும் அரசாங்கம் புறக்கணித்துள்ளது. அதிகமான விலையை செலுத்தியே இந்த உரத்தையும் கொண்டுவருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

விவசாயிகளால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர்களே இன்று விவசாயிகளுக்கு எதிரான தீர்மானத்தை எடுக்கிறார்கள் எனவும் கூறினார்.

### சமையல் எரிவாயு, சீமெந்து

# தட்டுப்பாடுக்கு விரைவில் தீர்வு




சமையல் எரிவாயு, சீமெந்து ஆகிய பொருள்களுக்கு சந்தைகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டுக்கு, அரசாங்கம் விரைவில் முடிவுகட்டும் என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை குறைக்க முடியாது. உரப் பிரச்சினையால் மரக்கறிகளின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளன. இதனால் அவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

நாளாந்தம் ஒரு இலட்சம் சிலிண்டர்களை சந்தைகளில் விநியோகிக்க அதற்குரிய நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சீமெந்து மூடைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளும் அடுத்த ஓரிரு வாரங்களில் சரி செய்யப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

சீமெந்து மூடைகளுக்கான தட்டுப்பாடுகள் நீங்கியதும் 50 கிலோகிராம் சீமெந்து மூடை ஒன்றை 1,275 ரூபாய்க்கு கொள்வனவு செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.



# பட்ஜெட்டுக்கு மு.கா வாக்களிக்காது

வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப்போவதில்லை என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான அக்கட்சியின் உயர்பீட கூட்டம் நேற்று (21) நடைபெற்றது. இதன்போதே வரவு- செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்பீட கூட்டத்தில் நிறைவு செய்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரவூப் ஹக்கீம், “வரவு - செலவு திட்டத்தை ஆதரவாக வாக்களிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்றைய கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கலந்துகொண்டிருந்தார். ஏனையோருக்கு சுகயீனம் காரணமாக கலந்துகொள்ள முடியாது என அறிவித்துள்ளார்கள்.” என தெரிவித்தார்.

**“ 2022 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் நவம்பர் 12ஆம் திகதியன்று நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டது**

மாவீரர் நாளுக்கு தடை கோரிய விண்ணப்பங்கள்;

# இன்று பரிசீலனை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில், மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி, பருத்தித்துறை மற்றும் மல்லாகம் நீதவான் நீதிமன்றங்களில், பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை, இன்று (22) நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளால், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திலும், சுன்னாகம், தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளால், மல்லாகம் நீதவான் நீதிமன்றத்திலும், வெள்ளிக்கிழமை (19), மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு தடை கோரி, விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.



நேற்று 21ஆம் திகதி தொடக்கம் வரும் நவம்பர் 28ஆம் திகதி வரை, இந்த தடை உத்தரவு வழங்குமாறு, பொலிஸாரால் கோரப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையின் 120ஆவது பிரிவுக்கு அமையவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்று தெரிவித்த பொலிஸார், இதனை தடை செய்யுமாறும் கோரியுள்ளனர்.

அத்துடன், நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரமும் பொதுமக்களை ஒன்றுதிரட்டுவதற்கு தடை உள்ளதாக, பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விண்ணப்பங்கள், வெள்ளிக்கிழமை (19), இரண்டு நீதிமன்றங்களிலும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட போது, பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டோர் மன்றில் முன்னிலையாகவில்லை.

இதனைத் தொடர்ந்து, அந்த விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று (22) நடைபெறும் எனவும் அதன் பின்னர் கட்டளை பிறப்பிப்பதாகவும் குறிப்பிட்ட நீதிமன்றங்கள், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சேர்ப்பிக்க உத்தரவிட்டன.

இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அனுமதி அளித்த யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம், தடை உத்தரவு கட்டளையை, வெள்ளிக்கிழமை (19) வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காரைதீவு பகுதியில்

# டெங்கு அபாயம்

■ வி.ரி.சகாதேவராஜா



தொடர்ச்சியான மழையைத் தொடர்ந்து காரைதீவு பகுதியில் டெங்கு நோய் வேகமாகப் பரவக்கூடிய அபாயகரமான நிலமை காணப்படுகிறது என்றும் மக்கள் அவதானமாக சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும் காரைதீவுப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், "மழை நீர் தேங்கி நின்று நுளம்புகள் அதிகமாகி டெங்கு நோயைப் பரப்பி வருகிறது. தனியே சுகாதாரத் துறையினரால் மாத்திரம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை சகலரும் அறிவீர்.

பொதுமக்கள் தமது வீடு வளவுகளில் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருள்கள் மற்றும் இடங்களை அகற்றுங்கள் அல்லது நீர் தேங்கி நிற்காதவாறு கவனியுங்கள்.

பயன்படுத்தப்படாத வீடுகள், வெற்று வளவுகள் மற்றும் கட்டட நிர்மானம் நடைபெறும் இடங்களிலும் அவதானம் செலுத்துங்கள். கிணறுகள் மற்றும் நீர்த்தாங்கிகளை நுளம்புகள் நுழையாத வண்ணம் நுளம்பு வலைகளால் மூடுங்கள். வீட்டு மொட்டை மாடிகள் மற்றும் கூரைப் பீலிகளில் கரிசனை எடுங்கள்.

பாடசாலைகள் உட்பட அரச நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தலங்களின் பொறுப்புதாரிகள் இவ்விடயத்தில் அதிகம் சிரத்தை எடுங்கள். நுளம்புக் கடியிலிருந்து உங்களையும் பிள்ளைகளையும் பாதுகாருங்கள்.

இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் அல்லது காய்ச்சல் குறைந்தும் உடலில் ஏதும் மாற்றங்கள் இருந்தாலும் இரத்தப் பரிசோதனைக்காக வைத்திய ஆலோசனையைப் பெறுங்கள்.

டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் உங்களது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகருக்கு சுயமாகவே முன்சென்று ஒத்துழைப்பு வழங்குங்கள்" என்றார்.



பாழடைந்து காணப்படும்

## 100 நாட்கள் வேலைத்திட்ட வீடுகள்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா

பொத்துவில் செங்காமம் கிராமத்தின் 05ம் கட்டையில், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் 100 நாட்கள் வேலைத் திட்டத்தின் கீழ் வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரமதாசவினால் கட்டப்பட்ட 66 வீடுகள் கவனிப்பாரற்று பாழடைந்த நிலையில் காணப்படுவதாக, செங்காமம் ஜும்ஆ பள்ளிவாயலின் தலைவர் எம்.எல்.இஸட். ஆப்தீன், நேற்று (21) தெரிவித்தார்.

## விபத்தில் ஒருவர் பலி நால்வர் படுகாயம்

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

கதரஸ்கொடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி - திருகோணமலை பிரதான வீதியில் நேற்று (21) காலை இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், நால்வர் படுகாயமடைந்துள்ளனர் என, கதரஸ்கொடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பலகாமம் சிராஜ் நகரை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நௌபர் ஹாஜியார் என்றழைக்கப்படும் எம்.எஸ். எம்.கரீம் வயது (56) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தம்பலகாமம் நோக்கி பயணித்த கனரக வாகனத்துடன் வேன் மோதியதில் வேனில்



பயணித்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சாரதியின் அருகாமையில் இருந்தவரே உயிரிழந்த நிலையில் வேனில் பயணித்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ள பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்தவரின் ஜனாசா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## விபத்தில் இருவர் படுகாயம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - டிப்போ சந்தியில், நேற்று (21) நண்பகல் 12 மணியளவில் நடைபெற்ற விபத்தில், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பரந்தன் திசையில் இருந்து கிளிநொச்சி நகருக்குள் நுழைந்த கன்டர் வாகனம், கட்டுப்பாட்டை இழந்து, பஸ் நிலையத்தில் தரித்திருந்த ஓட்டோ மற்றும் காருடன் மோதி விபத்துக்குள்ளானது.

பொறுப்புகூறலை கூறாமல்

## 'அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றுகின்றது'

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்ற பொறுப்புகூறலை கூறாமல், வெமனே 300 மில்லியன் ரூபாயை ஒதுக்கிவிட்டதாக, அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றுகின்றது என, வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில், நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், எந்தவொரு சமூக நலன் சார்ந்து அல்லது,



வறுமையை போக்கக்கூடிய அளவிலான வரவு-செலவுத் திட்டமாக இது அமைந்திருக்கவில்லை எனவும் கடன்பட்டு இந்த நாட்டை கொண்டு நடத்துகின்ற நிலையிலும் இன்று தாயின் கருவில் இருக்கின்ற பிள்ளையின் தலையில்கூட கடன் சுமையை சுமத்தக்கூடிய நிலையில் தான் இந்த அரசாங்கம் போய்கொண்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.



மன்னாரில்

## 998 கி.கி டைனமோட் வெடிபொருள்கள் மீட்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொகை டைனமோட் வெடிபொருள்கள், நேற்று முன்தினம் (20) மாலை, மன்னார் - சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து பொலிஸார் மீட்டுள்ளதோடு, சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடற்படையினரின் இரகசிய தகவலை தொடர்ந்து, மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர், 998 கிலோகிராம் எடையுள்ள குறித்த டைனமோட் வெடிபொருள்களை கைப்பற்றியுள்ளனர்.

மன்னாரில்

## 'மீண்டும் கொரோனா பரவல் அதிகரிப்பு'

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவித்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், கடந்த 20 நாள்களில் 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் கூறினார்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலைவரம் தொடர்பாக, அவர், நேற்று (21) விடுத்துள்ள கொரோனா அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், மன்னார் மாவட்டத்தில், நேற்று முன்தினம் (20), மேலும் புதிதாக, 18 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம்



காணப்பட்டுள்ளனர் எனவும் நவம்பர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை, 423 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் குறுப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 2816 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது வரை 25 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## இருநூல்கள் வெளியீடு...

மட்டக்களப்பு இராம கிருஷ்ணமிஷன் துணை மேலாளர் ஸ்ரீமத்சுவாமி நீலமாதவானந்தா ஜீ எழுதிய, உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஆக்கங்களடங்கிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, மட்டக்களப்பு கல்லடியிலுள்ள சுவாமியின் புனரமைக்கப்பட்ட சமாதி அமைந்துள்ள வளாகத்திலுள்ள மணிமண்டத்தில் கோலாகலமாக நடைபெற்றது.
(ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம்.நூர்தீன்)

வடகீழ் பருவமழைக்கு எதிர்கொள்ள

## முன்னாயத்தம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா



அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் வடகீழ் பருவகால பெயர்ச்சி மழை மற்றும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்கான முன்னாயத்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ், நேற்று (21) தெரிவித்தார்.

மழை காலங்களில் ஏற்படக் கூடிய வெள்ள நீரை அகற்றுவது, அனர்த்த தயார்படுத்தல்களை செய்தல், கிராமிய மட்டத்தில் அனர்த்த குழுக்களை வலுப்படுத்தல், முன்னெச்சரிக்கை விருத்தி செய்தல், நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

குடிநீர் இன்றித் தவித்த

## ஆஸாத்நகர் மக்களுக்கு குடிநீர்

■ எப்.முபாரக், எம்.எஸ்.எம்.ஸாகிர்

தோப்பூர் 58 ஆஸாத் நகர் மக்களின் நீண்ட கால குடிநீர் கோரிக்கைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

கிணறுகளின் மூலம் கிடைக்கும் குடிநீர் பாவனைக்கு உதவாத காரணமாக 58 ஆஸாத் நகர் மக்கள் குடிநீர் இன்மையால் மிக நீண்ட காலம் பல சொல்லொண்ணா இன்னல்களை எதிர் கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக பிரதேச மக்கள் பல அரசியற் தலைமைகளிடமும் பல கோரிக்கைகள் முன்வைத்தும் தீர்வு கிடைக்கவில்லை.

இதனால் அப்பிரதேச மக்கள் நம்பிக்கையீனத்துடன் இருந்த வேளையிலேயே ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மகளிர் அமைப்பாளர் றைஷா

> குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான குழாய்கள் பொருத்தும் நடவடிக்கை நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது

மகறூப்பிடம் தங்களது பிரச்சினையை முன்வைத்தனர்.

மக்களின் பிரச்சினையை அறிந்த உடனேயே நடவடிக்கை மேற்கொண்ட மகளிர் அமைப்பாளர் றைஷா மகறூப், 58 ஆஸாத் நகர் மக்களுக்கான குடிநீர்த் தேவையை நிறைவு செய்து வைத்தார்.

58 ஆஸாத் நகர் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான குழாய்கள் பொருத்தும் நடவடிக்கை நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது.

மின்வேலியில் சிக்கி

## காட்டு யானை பலியானமை தொடர்பில் விசாரணை

■ பாறுக் ஷிஹான்

காட்டு யானையொன்று மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்தமை தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேசத்தில் மல்வத்தை, புத்தங்கல காட்டுப் பகுதியில், காட்டு யானையொன்று, கடந்த வெள்ளிக்கிழமை(19) இறந்திருந்தது.



இந்தக் காட்டு யானை மின் கம்பி வேலியில் அகப்பட்டே இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பில் தற்போது வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும், சம்மாந்துறை பொலிஸார் இணைந்து, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான யானைகள் வருகை தந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கி ஆளுநரின் பங்கேற்புடன்

## யாழில் விசேட கலந்துரையாடல்

■ எம்.றொசாந்த், எஸ். நிதர்ஷன்

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில், சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களுக்கு உள்ள பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து தீர்வு காணும் விசேட கலந்துரையாடல் ஒன்று, நேற்று (21) காலை 8.30 மணியளவில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.



ஏற்றுமதி விவசாயப்பொருள்கள் ஏற்றுமதியால்

# அதிக வருமானம்

■ மொஹொமட் ஆஸிக்

ஏற்றுமதி விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியின் மூலமாக 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை, வரலாற்றில் அதி கூடிய வருமானம் ஈட்டப்பட்டுள்ளதென ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.பீ ஹீன்கெந்த தெரிவித்தார்.

பேராதனை- கெட்டம்பேயில் உள்ள ஏற்றுமதி விவசாய திணைக்களத்தில் வைத்து, நேற்று முன்தினம் (20) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த பத்து மாதங்களில் ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றுமதி மூலம் வரலாறு காணாத அந்நியச் செலாவணி வருமானத்தை ஈட்ட முடிந்துள்ளது.





கொரோனா பரவலால் அனைத்துத் துறைகளிலும் வருவாய் குறைந்து வரும் நேரத்தில், பத்து மாதங்களில் விவசாயப் பயிர்களின் ஏற்றுமதி மூலம் பெற்ற வருமானம் ரூ. 22,000 மில்லியனால் அதிகரித்துள்ளது. எனவும் கலாநிதி ஹீன்கெந்த தெரிவித்தார்

இந்த நாட்களில் இலங்கை பொருளாதாரத்துக்குப் ஏற்றுமதி விவசாயத் துறை முக்கியமானது. கடந்த பத்து முதல் பதினைந்து ஆண்டுகளில் அதிகபட்ச ஏற்றுமதி வருவாய், ஒக்டோபர் மாதம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்றுமதி விவசாயத் துறையில், கறுவா , மிளகு மற்றும் கிராம்பு போன்ற பயிர்கள் முக்கிய ஏற்றுமதி பயிர்களாகும். கடந்தாண்டு ஏற்றுமதியின் வருமானம் ரூ. 60 பில்லியன் அல்லது ரூ. 60,000 மில்லியன். ஆனால் இந்த வருடம் ரூ. 82 பில்லியன் அல்லது ரூ.82,000 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதேப்போல் . இந்த 82,000 மில்லியன் ரூபாயில் 37,000 மில்லியன் ரூபாய் கருவா ஏற்றுமதி மூலம் பெறப்பட்டுள்ளது. மிளகு 16,000 மில்லியன், பாக்கின் மூலம் 7,000 மில்லியன் மற்றும் கிராம்பு மூலம் 6,000 மில்லியன் வருமானம் பெறப்பட்டுள்ளது.

கொட்டகலையில்

# தன்னுயிரை மாய்த்த இளைஞனுக்கு தொற்று

■ சுதத். எச்.எம்.ஹேவா

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகார பிரதேசத்துக்கு உட்பட்ட யுனிபீல்ட் தோட்டத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட இளைஞனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என, கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

18 வயதான அவ்விளைஞன், விஷமருந்திய நிலையில், கொட்டகலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, பிரதேச பரிசோதனைக்காக சடலம் கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு முன்னெடுக்கப்பட்ட என்டிஜன் பரிசோதனையின் போது, இளைஞனுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த இளைஞனின் குடும்ப உறுப்பினர்கள் ஐவர் சுயதனிமை ப்படுத்தப்பட்டுள்ளனர். இளைஞனுடன் நெருங்கிப் பழகியவர்களை சுயதனிமைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஆசிய அபிவிருத்தி வங்கியால்

# 2 லொறிகளை அன்பளிப்பு

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாணத்துக்கு உட்பட்ட இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களுக்கு ஔடதங்கள் பகிர்ந்தளிப்பதற்காக, இரண்டு லொறிகளை ஆசிய அபிவிருத்தி வங்கி அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. .

அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில், சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியில் 17ஆம் திகதி, இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட இவ்விரு லொறிகளின் பெறும் 200 இலட்சம் ரூபாயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

போனஸ் ஆசனத்தில் நுழைந்தவர்

# பாரபட்சமாக செயற்படுகிறார்

## டெஸ்போட் மக்கள் குற்றச்சாட்டு

■ டி சந்ரு

நுவரெலியா பிரதேச சபைக்கு, கிரிமிட்டிய கிராம சேவகர் பிரிவிலிருந்து 1,800 வாக்குகளால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

எனினும், அவரை அக்கட்சி இடைநிறுத்திவிட்டு புதிதாக பெண் உறுப்பினர் ஒருவரை நியமித்தது.

இந்த நிலையில் குறித்த பெண் உறுப்பினர் தனக்கு விருப்பமான இடங்களுக்கு மாத்திரம் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

அந்த பெண் உறுப்பினரால் டெஸ்போட் எ,டெஸ்போட் பி டெஸ்போட் டிவிசன் என்ற மூன்று பிரிவுகளுக்கும் இதுவரையில் எந்தவிதமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் இதற்க முதலில் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர் கார்லிபேக் , தம்பகஸ்தலாவ , எவோக்க , கிரிமிட்டி ,டெஸ்போட் எ ,டெஸ்போட் பி டிவிசன் பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜ் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.







# சுகாதார உபகரணங்கள் கையளிப்பு

கண்டி ரோட்டரி கழகமும் லீட்ஸ் நிறுவனமும் இணைந்து, பன்விலை கஷ்ட பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு, கொரோனாத் தடுப்பு சுகாதார உபகரணங்களை க/வத் /நக்கிள்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் வைத்து வழங்கி வைத்தது.. இதன்போது அதிபர் எம் சிவகுமார் உபகரணங்களை பெற்றுக்கொண்டதையும் கலந்துகொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம் (மெய்யன்)





# சாப்பாடு பொதியின் விலையும் உயர்ந்தது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் மற்றும் அதனை அண்மித்த நகரங்களில் சடுதியாக அதிகரித்துள்ள மரக்கறிகளின் விலை அதிகரிப்பால், சாப்பாடு பொதிகளின் விலையும் அதிகரித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை 160 ரூபாய்க்கு விற்கப்பட்ட மரக்கறி சாப்பாடு பொதியின் விலை 200 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள உரப் பிரச்சினை மற்றும் தொடர்ச்சியான மழையுடனான வானிலை என்பவற்றால் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் வாரங்களில் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீசப்படும் முகக் கவசங்கள்

# தொற்று பரவும் அபாயம்

■ இந்திக அருணகுமார

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக பயன்படுத்தப்படும் முகக் கவசங்கள், சுற்றாடலில் ஆங்காங்கே வீசப்படுவதன் காரணமாக மாத்தளை மாவட்டத்தில் பாரிய சுற்றாடல் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மாத்தளை மாவட்டத்தில் பிட்டவல மேட்டு நிலம், மொரஹாகந்த, நாவுல மற்றும் மாத்தளை ஆகிய இடங்களில் ஆங்காங்கே அதிகளவான முகக்கவசங்கள் வீசப்பட்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இவ்வாறு முகக் கவசங்கள் சுற்றாடலில் வீசப்படுவதால், அதன்மூலம் மீண்டும் தொற்று தலைதூக்கும் ஆபத்து காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் சுகாதார தரப்பினர் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு-கண்டி ரயில்கள் ஓடும்

சீரற்ற வானிலையால் ரயில் பாதைகள் சேதமடைந்ததன் காரணமாக, இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்பு- கண்டி ரயில் சேவைகள் இன்றிலிருந்து (21) வழமைக்குத் திரும்பும் என ரயில்வே பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையிலிருந்து பலன ரயில் நிலையம் வரை, ரயில் பாதை சேதமடைந்தமையால் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. சேதமடைந்திருந்த ரயில் பாதையை சீரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்தில்

# துப்பாக்கிகளை ஆராயுமாறு கட்டளை

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்ட விவசாயிகளிடம் உள்ள பதிவு செய்யப்படாத துப்பாக்கிகள் தொடர்பில், உடனடியாக ஆராய்ந்து பார்க்குமாறு, மாத்தளை ஆணையாளர் கருணாசிறி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மாத்தளை மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இதற்கமைய லக்கல பிரதேசத்தில் பதிவு செய்யப்படாத துப்பாக்கிகள் 200 காணப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு பதிவு செய்யப்படாத துப்பாக்கிகளைப் பயன்படுத்தி, பல்வேறு குற்றச்செயல்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் எனவே இவை தொடர்பில் ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# நுவரெலியாவில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

## வர்த்தகர்களும் ஆதரவு

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் விவசாயிகள்,மரக்கறி உற்பத்தியாளர்கள் தாங்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளை அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வதற்காக நுவரெலியா நகரின் மத்தியில் நேற்று (21) காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுத்தனர்.

அந்த ஆர்ப்பாட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் நுவரெலியா மற்றும் கந்தப்பளை நகரங்களில் வர்த்தகர்கள் தங்களது வியாபார நிலையங்கள் மூடி ஆதரவைத் தெரிவித்தனர்.

மேலும் இராகலை நகரில் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு மரக்கறி கொள்வனவாளர்கள் தமது ஆதரவை தெரிவித்திருந்தனர்.



மரக்கறி விவசாயிகள்,வர்த்தகர்கள் மற்றும் மரக்கறி தோட்டங்களில் தினக்கூலிகளாக பணியாற்றுவோர் தொழில் முடக்கத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நகரில் எவ்வித பதற்றமும் ஏற்படாத நிலையில், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், நுவரெலியாவிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு மரக்கறிகள் கொண்டு செல்வது முற்றாக நேற்று (21) தடைப்பட்டிருந்தது.

**“ விவசாயிகளின் போராட்டத்துக்கு ஆதரவாக, வர்த்தகர்களும் கடைகளை அடைத்து, ஆதரவளித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமன்றி, நுவரெலியாவில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு நேற்றையதினம் மரக்கறிகள் லொறிகள் செல்லவில்லை.**

# முன்மொழிவுகள் யாவும் இனித்தன: நிபந்தனைகள்தான் கசக்கின்றனன

பிச்சைக்காரனின் தட்டில் கிடக்கும் சில்லறைகளில், ஒன்பது ரூபாவுக்கான சில்லறைகளை எடுத்துக்கொண்டு, அத்தட்டில், பத்து ரூபாய் குற்றியையோ அல்லது தாளையோ ஒருசிலர் போடுவர். இதில், ஒரு ரூபாய் பிச்சைக்காரனுக்குக் கிடைக்கிறது.

இன்னும் சிலர், அத்தட்டிலிருந்து இரண்டொரு தாள்களை தூக்கிக்கொண்டு ஓடிவிடுவர், பலரும் தட்டை ஏந்தி நிற்பவர்களைக் கண்டுக்கொள்வதே இல்லை. பிச்சைகாரர்களில் பலரும் ஏமாற்றுப் பேர்வழிகளாக இருந்தமை, கண்டறியப்பட்டுள்ளது. ஆதலால், அவர்கள் மீதிருந்த பரிதாபக் குணம் குறைந்துகொண்டே வருகிறது எனலாம்.

இந்நிலையில், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் மீதான விமர்சனங்களை ஆழமாக நோக்குமிடத்து, இந்த கதைக்கும் பட்ஜெட் முன்மொழிவுகளுக்கும் ஒர் ஒற்றுமையை காணமுடிகிறது, பிச்சைக்காரனிடம் இருக்கும் அத்தட்டையே அபகரிப்பதாய் முன்மொழிவுகள் அமைந்திருக்கின்றன எனலாம்.

வரவு- செலவுத்திட்ட யோசனைகளை கேட்கும் போதெல்லாம், பலருக்கும் மனங்குளிர்ந்திருக்கும். ஒவ்வோர் அரசாங்கங்களும் இவ்வாறான இனிப்பான யோசனைகளை பூசிமெழுகியிருக்கின்றன. இந்த அரசாங்கமும், மக்களை மாய வலைக்குள் வீழ்த்தி, அவர்களிடமிருந்து அபகரிக்கும் செயற்பாடுகளையே முன்னெடுகிறது.

அந்நியசெலாவணியை ஈட்டிக்கொடுப்பதில் பிரதான பங்கு வகிக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், வஞ்சிக்கப்பட்டவர்களாவே இன்னுமிருக்கின்றனர்.

அந்த சமூகத்தை பற்றியும் ஏதாவது கூறப்பட்டிருக்கிறது என்பதை காண்பிப்பதற்காக, லயன் அறைகளை ஒழிப்பதற்காக, நிதியொதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை வகுத்துப்பார்த்தால், ஒரு வீட்டுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு மலசலகூடத்தைக்கூட கட்டமுடியாதென எதிர்க்கட்சிகள் விமர்ச்சித்திருந்தன.

இந்நிலையில், கொரோனாவினால் பாதிக்கப்பட்ட தொழிற்றுறைகளில் ஒன்றான ஓட்டோ உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென பட்ஜெட் முன்மொழிவில் கூறப்பட்டது.

ஆனாலும் மீற்றர் இல்லாத ஓட்டோக்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகள் 2022 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து அமுலாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆக, 2022ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் காலம் ஆரம்பிக்கும் முதல் நாளன்றே, ஓட்டோ உரிமையாளர்களுக்கு கடும் நெருக்கடி நிலைமை ஏற்படப்போகிறது. மீற்றர் இல்லாத ஓட்டோக்களில் அதனைப் பொருத்தவேண்டும். அதற்காக ஒருதொகை செலவாகும். அதன்பின்னர், நிவாரணம் வழங்கினால் என்ன, வழங்காவிட்டால் என்ன?

பட்ஜெட்டின் போது அலங்கரிக்கப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு முன்மொழிவுகள் அடுக்கப்படும். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக, கால வரையறையும் கூறுவர், இதற்கிடையே விதிக்கப்படும் நிபந்தனைகளை பார்க்குமிடத்து, பிச்சைக்காரனின் கையிலிருக்கும் தட்டை அப்படியே அபகரிப்பனவாய் இருக்கும்.

ஆகையால், 2022 முன்மொழிவுகள் யாவும் இனித்தன, அவற்றை அமுல்படுத்துவதற்கான நிபந்தனைகளைக் கேட்கும்போதுதான், அவை கசக்கின்றன, இன்னும் எவ்வாறான நிபந்தனைகள் எல்லாம் விதிக்கப்படும் என்பதற்கு 2022 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் காலமே பதில்சொல்லும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.




அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

கால மாற்ற வேகத்தில் இடம்பெறும் அரசியல் குழப்பநிலை, அதனால் ஏற்படும் பின்விளைவுகளால், பொருளாதார வீழ்ச்சிகளால் சாதாரண மக்கள்தான் துன்பப்படுகின்றனர்.

மிகவும் செல்வந்தர்கள், எப்படியும் ஸ்திரமான நிலையில் தங்களை வைத்துக்கொள்கின்றார்கள். பெரும் வியாபாரிகளுக்கு 'பிரச்சினைகள்' மேலதிக வருமானங்களை அளிக்கின்றன.

இரக்கம் சுரக்காத மனிதர்களிடம் இருந்து, எந்தவிதமான நன்மைகளையும் உலகம் பெறப்போவதில்லை. உதாரணமாக உளுந்து விலை அதிகரித்துக் கொண்டே செல்லும்போது, அதைச் சாதகமாகப் பயன்படுத்தி கண்டபடி விலையேற்றுவர். நாள்கள் செல்லச்செல்ல, உளுந்தும் உளுத்துப்போன பின்னர், அதன் விலையைச் சற்றுக் குறைத்துக் கொடுத்தாலும், மக்கள் வாங்கத் தயாரில்லை.

அதிகம் ஆசைப்பட்டால், நஷ்டமடைந்தே தீருவார்கள். மக்களின் தேவைகளை உணர்ந்து, தங்களால் இயன்றவரை உதவுபவர்களுக்கு நஷ்டம் வராது. காலம் அவர்களுக்கு மிகப்பெரும் அனுகூலங்களை வழங்கும். ஒருவர் சரியும்போது, தூக்கி நிமிர்த்துவதே தர்மம். பாவங்களைத் தேடிச் சுமத்தலாகாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வடக்கின் அபிவிருத்தி



என். கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

அரச பாதீடு மீதான விவாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் உரையாற்றிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முப்பத்தைந்து வருடபோரினால் அழிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களை நாட்டின் ஏனைய பகுதி மக்களுடன் ஒரே தட்டில் வைத்து ஒப்பிடுவதும் எதுவித உத்தரவாதமோ விசேட கவனிப்போ இன்றி,நாட்டின் ஏனைய பகுதியினருடன் அவர்களை போட்டியிட நிர்ப்பந்திப்பதும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் தொடர்ச்சியாகவே கருதப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். அவர் சொன்னதில் உண்மை இல்லாமல் இல்லை. மிக நீண்டகாலமாக பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டமொன்றை எதுவிதமாக விசேட நிவாரண அல்லது உதவி ஏற்பாடுகளுமின்றி, மற்றையவர்களோடு போட்டியிடச் சொல்வது நியாயமாகாது.

மறுபுறத்தில், 2009ல் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து நாம் அவதானித்தால், கணிசமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் வடக்கில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், வடக்கின் எதிர்காலத்தை வளமாக்கும் விதைகள் எதுவும் இதுவரை விதைக்கப்படவில்லை. அபிவிருத்தியின் அடிப்படை பொருளாதார வளர்ச்சி. குறிப்பிடத்தக்களவிலான பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் எதுவும் வடக்கில் முன்னெடுக்கப்படவில்லை. உட்கட்டமைப்பு வசதிகள் என்பவை வடக்கை நாட்டின் ஏனைய பகுதிகளோடு இணைக்கும் வீதிகள், மற்றும் புதையிரதப்பாதையமைப்பு என்பதைத்தாண்டி பெரும் முன்னேற்றம் காணவில்லை. வீடமைப்பு என்பது ஆங்காங்கே முன்னெடுக்கப்பட்டாலும், அதனைத்தாண்டிய வாழ்வாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படாமையினால், மக்கள் வறுமையில் உழலவேண்டிய சூழலே காணப்படுகிறது. இவையெல்லாம் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் முன்னெடுக்கப்படுபவை வெறும் கண்துடைப்புக்கள்தான் என்பதை கோடிகாட்டி நிற்பதோடு, நீடித்து நிலைக்கத்தக்க அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான எந்த முன்னெடுப்புக்களும், திட்டங்களும், ஏன் சிந்தனைகள் கூட இருப்பதாகத் தெரியவில்லை.

விதையை விதைக்கிறவன், பலவேளைகளில் விருட்சத்தைக் காணும் வாய்ப்பைப் பெறுவதில்லை. ஆனால் அதற்காக அவன் விதைக்காமலே இருந்துவிட்டால், விருட்சங்களை எந்தத் தலைமுறையும் அனுபவிக்க முடியாமல் போய்விடும். அபிவிருத்திக்கான விதைகளை நாம் இன்று விதைப்பதைப் பற்றிச் சிந்தித்தால்தான், நாளைய தலைமுறைக்கு அவர்கள் மகிழ்ச்சியோடு வளமாக வாழத்தக்கதொரு மண் கிடைக்கும்.

பொருளாதாரத்தின் ஆணிவேர் உற்பத்தி. பொருட்களை உற்பத்தி செய்வதும், சேவைகளை வழங்குவதும் பொருளாதாரத்தின் அடிப்படை. உற்பத்திகள் உள்ளூர் சந்தைகளைத் தாண்டி வெளியூர் சந்தைகளைச் சென்றடைய வேண்டும். சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டவர்கள் வரவேண்டும். அப்போதுதான் அந்த மண்ணின் பொருளாதாரம் பெருகும், மக்களின் வாழ்வு வளமாகும். உலகத்தோடு இணையும் நவீன புள்ளி இணையம். பலமான இணைய வசதி இருக்கும் போது, நவீன கணிணித் தொழில்நுட்ப சேவைகளை முழு உலகுக்கும் வழங்குவது சாத்தியமாகும். ஆனால் பொருட்களும், ஏனைய சேவைகளும் வழங்கப்பட, பாரம்பரிய இணைப்பு வசதிகளான துறைமுகமும், விமான நிலையமும் அவசியமாகிறது.

வரலாற்றை எடுத்துப் பார்த்தால், நாடோடிகளாகத் திரிந்த மனிதர்கள், ஒரேயிடத்தில் வாழத்தொடங்கியபோது, அவர்கள் நதிக்கரையோரங்களில் குடியேறினார்கள். நதிக்கரை நாகரீகங்கள் உருவாயின. நதிக்கரைகளையொட்டியே நகரங்கள் உருவாயின. சர்வதேச வணிகம் வளர்ந்தபோது, துறைமுகங்களையொட்டி பெருநகரங்கள் உருவாகத் தொடங்கின. அந்நியர் வரும்வரை, இலங்கைத் தீவில் எந்தவோர் இராச்சியத்தின் தலைநகரும் துறைமுக நகரில் அமையவில்லை. அந்நியர் வந்து, சர்வதேச வணிகம் வளர்ந்தபோது, அவர்களின் ஆதிக்கத்தின் கீழ்தான் துறைமுக நகரங்கள் வளரத்தொடங்கின. கொழும்பு எனும் வணிகத் தலைநகரின் வரலாறும் இதைத்தான் சுட்டிக்காட்டும். ஆகவே சர்வதேச வணிக உலகின் உயிர்நாடி துறைமுகமும், விமானநிலையமும். அவை உருவாகும் போது, நீண்டகாலத்தில் அந்த நகரமும், வேறு காரணங்கள் இடையீடு செய்யாத நிலையில், அந்தப் பிராந்தியமும் வளர்வதற்கான சாத்தியம் அதிகம்.

மஹிந்த ராஜபக்ஷ தனது பிறந்த மண்ணான ஹம்பாந்தோட்டையில் துறைமுகம், மற்றும் சர்வதேச விமானநிலையத்தை அமைத்தபோது பலரும் அங்கு எதற்கு இது என்று நகைப்பாகவே விமர்சித்தார்கள். அந்த விமர்சனத்தில் காலத்தின் தேவை சார்ந்த நியாயங்களும் இருந்தன. விமானங்கள் வராததால், அந்த விமான நிலையத்தை நெற்களஞ்சியமாகவும் பயன்படுத்தினார்கள் என செய்திக்குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஆனால் ஹம்பாந்தோட்டை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வருகிறது. கொழும்பு நிறைந்து வழியும் நிலையில், எதிர்கால முதலீடுகளுக்கான வாய்ப்பான இடமாக ஹம்பாந்தோட்டை உருவாக்கப்பட்டிருக்கிறது. சீனாவின் கனவுத் திட்டமான "ஒற்றைப்பட்டை ஒற்றைப்பாதை" திட்டத்தின் ஒரு புள்ளியாக ஹம்பாந்தோட்டை இருக்கிறது. அடுத்த 50 வருடங்களில் இலங்கையின் முக்கிய நகரங்களில் ஒன்றாக அது மாறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. நிற்க.

வடக்கின் அபிவிருத்தி பற்றி நீண்டகால அடிப்படையில் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. இன்றே விதைத்தால்தான் அது நாளை முளைக்கும். வடக்கின் அபிவிருத்திக்கான மூலவேர் ஏற்கனவே அங்கு இருக்கிறது. பலாலி சர்வதேச விமான நிலையமும், காங்கேசன்துறை துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்பட்டால், அது வடக்கின் அபிவிருத்திக்கு அஸ்திவாரமாக அமையும். சர்வதேசத்துடன் வடக்கை இணைக்கும் புள்ளிகளாக இவை வரும்போது, வடக்கின் உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளுக்கான முதலீகள் வருவதற்கான வாய்ப்புக்கள் இன்னும் அதிகரிக்கும். வடக்கின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை பெருமளவிற்கு உயர்த்துகிற ஒரு முக்கிய அம்சமாக இவை அமையும்.

பலாலி விமானநிலையம், யாழ் சர்வதேச விமான நிலையமாக பெயரளவில் அறிவிக்கப்பட்டு, ஓடுபாதையும் இந்திய உதவியுடன் மேம்படுத்தப்பட்டிருந்தாலும், நவீன சர்வதேச விமான நிலையமாக அது மாற, இன்னும் பலமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி அவசியமாகிறது. ஹம்பாந்தோட்டையைப் பொறுத்தவரையில் சீனா, அதற்கான கடனுதவியை வழங்கியிருந்தது. ஹம்பாந்தோட்டையில் சர்வதேச விமானநிலையத்தை அமைப்பதற்கு ராஜபக்ஷர்கள் காட்டிய அக்கறையை, யாழ்ப்பாண விமாநிலையத்தை கட்டியெழுப்புவதில் காட்டுவார்களா என்பது சந்தேகமே. யாழ்ப்பாண விமானநிலைய அபிவிருத்திக்கு இந்தியா கடன்கொடுக்க முன்வந்தாலும், உதவியாகத் தருவதென்றால் பரவாயில்லை, கடனாகத் தருவதென்றால் வேண்டாம் என்று ராஜபக்ஷர்கள் சொன்னால், அது அவர்கள் தமிழ் மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்துகிறார்கள் என்பதைத்தான் கோடிகாட்டிநிற்கும்.

மறுபுறத்தில், யாழ்ப்பாண விமான நிலைய அபிவிருத்தியை இந்தியா கையேற்பது இந்திய-சீன போட்டியில் இந்தியாவிற்கு சாதகமானதொன்றாக அமையும். நிச்சயமாக இன்னொரு விமான நிலையத்தை இலங்கையின் வடக்கில் இந்தியாவிற்கு மிக நெருக்கமாக கைப்பற்றிக்கொள்ள சீனா ஆர்வம் காட்டும். ஆனால் அதனை அனுமதித்து இந்தியாவை நேரடியாகப் பகைத்துக்கொள்வது இலங்கைக்கு உவப்பானதொரு முடிவாக இருக்காது. ஆகவே இலங்கையும், இந்தியாவும் வெற்றி-வெற்றி என்பதை அடைய இந்தியா யாழ்ப்பாண விமானநிலைய அபிவிருத்திக்கான நிதியை உதவியாக அல்லது மிக நீண்டகால வட்டியற்ற சகாயக் கடனாக இலங்கைக்கு வழங்குவது மிகச்சிறந்த உபாயமாக அமையும்.

காங்கேசன்துறை துறைமுகத்தின் நிலையும் கிட்டத்தட்ட இதுதான். சிலமாதங்கள் முன்பு இந்திய கடனுதவியுடன் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் என்று செய்திக்குறிப்புக்கள் தெரிவித்ததோடு, அந்தச் செய்தி அடங்கிவிட்டது. வடக்கில் சர்வதேச விமான நிலையமும், வணிகத் துறைமுகமும் அமைவது, வடக்கினதும், வடக்கு-கிழக்கினதும், முழு இலங்கையினதும் நீண்டகால அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதாகும். அது இந்தியாவின் போட்டியநாடுகளின் அரவணைப்பிற்குச் செல்லாமலிருப்பது இந்தியாவின் தேசியபாதுகாப்பிற்கும், இந்திய நலன்களுக்கும் சாதாகமானதாக அமையும். ஆகவே வடக்கின் அபிவிருத்தி பற்றி பேசுபவர்கள் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையத்தையும், காங்கேசன்துறை வணிகத் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதை முன்னுரிமையடிப்படையில் கொண்டுநகர்த்த வேண்டும். மறுபுறத்தில் அதற்கான உதவியை வழங்க இந்தியா முன்வர வேண்டும். அவ்வாறு இந்தியா அதற்கான உதவியைச் செய்யாவிட்டால், சீன உதவியுடனாவது இதனை நடத்துவது அவசியமாகிறது. இந்தத் திட்டங்கள் தொடர்பில் இந்தியாவிற்கு நிச்சயமாக முன்னுரிமை அளிக்கலாம். அது வரலாற்று ரீதியிலான இந்திய-இலங்கை உறவிற்கு ஏற்புடையதொன்றுதான். ஆனால் தகுந்தநேரத்தில், தேவையான உதவியை இந்தியா செய்யாவிட்டால், இந்தியாவைத் தாண்டி மாற்று உதவிகளை பெற்றுக்கொள்ள இலங்கை தயக்கம் காட்டக் கூடாது.

## கடிதங்கள்

### அடிக்கல்நாட்டியும் 'முளைக்காத' வரவேற்புவளைவு

காரைதீவின் தென்புற எல்லையில் வரவேற்பு வளையை நிர்மாணிப்பதற்காக மூன்று வருடங்களுக்கு முன்னர் அடிக்கல் நடப்பட்டும், இன்னும் ஒருசாண்கூட கட்டட வேலைகள் நகராமல், அப்படியே கிடப்பது குறித்து காரைதீவு பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அடிக்கல் நடப்பட்ட தடயத்தைக்கூட, அந்த இடத்தில் காணமுடியாதநிலை உள்ளது. தற்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபரான வே. ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளராகவிருந்த 2018ஆம் ஆண்டு, இதற்கான அடிக்கல் நாட்டும் விழா கோலாகலமாக நடைபெற்றது.

காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், அதற்கான 85 இலட்சம் ரூபாய் நிதியை,முன்னாள் அமைச்சர் மனோ கணேசனிடமிருந்து பெற்று பிரதேச செயலகத்திடம் கொடுத்திருந்தார். செயற்படுத்தும் பொறுப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்மாணத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும், நிர்வாக நடவடிக்கைகள் காரணமாகத் தாமதமடைந்து வந்தது. 2020 நவம்பர் மாதம் 16ஆம் திகதி இதன் கட்டுமானப்பணிகளை மீள ஆரம்பிக்கும் முகமாக பிரதேச செயலாளர், தவிசாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயரதிகாரிகள் கூடி, களத்திற்குச் சென்று உரிய இடத்தை நிர்மாணத் திணைக்களத்துக்கு வழங்கியிருந்தனர். இருந்தபோதிலும் இன்றுவரை அப்பணி ஆரம்பமாகவில்லை.

உரியதரப்பினர் இவ்வரவேற்பு வளையை இனியாவது அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வி.ரி. சகாதேவராஜா

உத்தரப் பிரதேசம்

# உயிருடன் பிணவறையில் வைக்கப்பட்ட நபர்



உத்தரப் பிரதேசம் மாநிலம் மொராதாபாத் மாவட்டத்தை சேர்ந்த ஸ்ரீ கேஷ் குமார் என்பவர் கடந்த வியாழக்கிழமை விபத்தொன்றில் சிக்கி படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், ஸ்ரீகேஷ் குமாரை பரிசோதனை செய்த மருத்துவர்கள், அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர். மேலும், இது குறித்து ஸ்ரீகேஷின் குடும்பத்தினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அவர்கள் மருத்துவமனைக்கு வந்து அடையாளம் காட்டும்வரை வரை ஸ்ரீகேஷின் உடல் பிணவறையில் உள்ள குளிரூட்டியில் வைக்கப்பட்டது.

இந்நிலையில் சுமார் ஏழு மணி நேரத்திற்கு பின்னர் மருத்துவமனைக்கு வந்து உடலை அடையாளம் கண்ட ஸ்ரீகேஷின் மைத்துனி மதுபாலா மற்றும் குடும்பத்தினர், பிரேதப் பரிசோதனைக்கு சம்மதித்து ஆவணத்தில் கையெழுத்திட்டனர்.

ஆவணத்தை பொலிஸாருக்கு சமர்ப்பிக்க முற்பட்டபோது, ஸ்ரீகேஷின் உடலில் அசைவு தெரிவதை மதுபாலா கவனித்து மருத்துவரிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, ஸ்ரீகேஷின் உடலை எடுத்து சோதித்து பார்த்தபோது, அவர் உயிருடன் இருப்பது தெரியவந்துள்ளது.

தொடர்ந்து, ஸ்ரீகேஷுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில் . இச் சம்பவம் மருத்துவமனை வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மேலும், அலட்சியமாக இருந்த மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் அளிக்கப்படும்" என்று ஸ்ரீகேஷின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கரூர்

## 'தங்கத் தந்தை' பட்டம்

தமிழகத்தில் உள்ள கரூர் பகுதியில் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள முன்வரும் ஆண்களை ஊக்குவித்து கௌரவிக்கும் விழாவொன்று நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில்" குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் ஆண்களுக்கு தங்கத் தந்தை பட்டம் வழங்குவதுடன், வீட்டு மனைக்கான உறுதிப் பத்திரம் அல்லது அரசின் முக்கிய உதவித் திட்டம் பெற்றுத் தரப்படும் என்று கரூர் மாவட்ட ஆட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலும் ஊக்கத்தொகையாக 5,000 ரூபாய் வழங்கப்படும் எனவும் வீட்டில் உள்ள முதியவர் ஒருவருக்கு முதியோர் உதவித்தொகை, விலையில்லாக் கறவை மாடு, வெள்ளாடு, இலவச கால்நடைக் கொட்டகை, இவற்றில் ஏதேனும் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'டைம்ஸ்' சதுக்கத்தில் தோன்றிய இளையராஜா

'இசை ஞானி' என அழைக்கப்படும் இளையராஜா, ஏராளமான பாடல்களுக்கு இசையமைத்துள்ளார்.

இந்தியாவில் உள்ள மூத்த இசையமைப்பாளர்களில் ஒருவரான இவருக்கு இந்தியாவில் மட்டுமின்றி, உலக முழுதும் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர்.

இந்நிலையில், இளையராஜாவை கௌரவிக்கும் விதமாக, கடந்த 19 ஆம் திகதி இரவு அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள டைம்ஸ் சதுக்கத்தில் உள்ள பிரமாண்ட எல்.இ.டி., விளம்பர திரையில், அவர் குறித்து விளம்பரம் செய்யப்பட்டது.

அதில் இளையராஜாவின் புகைப்படத்திற்கு மேல், 'இசையின்




ராஜா இங்கே இருக்கிறார்' என, குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்புகைப்படங்களை, சமூக வலைதளங்களில் இளையராஜா பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கேரளா

## முகத்தில் அசிட் வீசிய தாய்

திருமணம் செய்துகொள்ள மறுத்த இளைஞரின் மீது இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் அசிட் வீசிய சம்பவம் கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கேரளாவைச் சேர்ந்த ஷீபா என்பவர், பூஜப்புரா பகுதியை சேர்ந்த அருண்குமார் என்பவரை பேஸ்புக் மூலம் காதலித்து வந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாயான ஷீபா, தான் திருமணமானவர் என்பதை மறைத்து அருண் குமாருடன் பழகி வந்ததாகவும் , இருவரும் பலமுறை தனிமையில் சந்தித்து பேசி வந்ததாகவும் , இதன்போது தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி அருண்குமாரை அவர் வற்புறுத்தி வந்ததாகவும் கூறப்படுகின்றது.

எனினும், பின்நாளில் ஷீபா, திருமணமானவர் என்பது அருண் குமாருக்குத் தெரிய வரவே அதிர்ச்சி அடைந்த அவர் ஷீபாவை சந்திப்பதைத் தவிர்த்து வந்துள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த ஷீபா, அருண் குமாரை ஆசை வார்த்தைகள் கூறி வரவைத்து அவர் மீது அசிட்டை வீசியுள்ளார்.

இந்நிலையில் அருண் குமாரின் அலறல் சத்தத்தைக் கேட்டு அங்கு விரைந்த மக்கள் அவரை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதனையடுத்து ஷீபாவைக் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரானைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சுற்றுலாப் பயணிகள் தனியானச் செல்ல வேண்டாம்



இந்தியாவில் அண்மைக் காலமாக பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் வெகுவாக அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் டெல்லியில் உள்ள அமெரிக்க தூதரகமானது " அமெரிக்க பெண்கள் இந்தியாவுக்கு தனியாகச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள வேண்டாம்" எனத் தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இவ்வறிக்கையானது இந்திய மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மத்தியப் பிரதேசம்

## இந்தியாவின் தூய்மையான நகர்

இந்தியாவில் மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தினால் ஆண்டுதோறும் 10 இலட்சத்துக்கும் அதிகமாக மக்கள் தொகை கொண்ட தூய்மையான பத்து நகரங்களின் பட்டியலானது வெளியிடப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இம்முறை மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூர் (Indore ) நகரம் தொடர்ந்து 5 ஆவது முறையாகவும் இந்தியாவின் தூய்மையான நகரமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் இந்தூரை அடுத்து சூரத், விஜயவாடா, நவி மும்பை, புதுடெல்லி, திருப்பதி, புனே, ராய்புர், போபால், வடோதரா, விசாகப்பட்டினம் அகமதாபாத், ஆகிய நகரங்கள் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





படம்:
கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வில், யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் மற்றும் பிரதம விநியோக அதிகாரி செனத் ஜயதிலக ஆகியோர் யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் கிளப் சிறந்த சாதனையாளர்களுக்கு டொயோட்டா பிரெமியோ வாகனங்களின் சாவிகளை கையளிப்பதை காணலாம்.

மூன்றாம் காலாண்டில் SLT குழுமம் நேர்த்தியான

## நிதிப் பெறுபேறுகளை பதிவு

SLT-MOBITEL, 2021 நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் வரிக்கு பிந்திய இலாபத்தில் 49.2 சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. இந்தப் பெறுமதி ரூ. 3.2 பில்லியனாக பதிவாகியிருந்தது. குழுமத்தினுள் செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் விரயத்தை குறைத்து, கழிவுகளை பணமாக மாற்றிய நடவடிக்கைகளுடன், செயற்பாட்டு செலவுகளை நிர்வகித்திருந்ததனூடாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சேமிப்புகளை பதிவு செய்ய முடிந்திருந்தது.

SLT குழுமத்தின் 2021 மூன்றாம் காலாண்டுக்கான வருமானம் 15.6 சதவீதத்தால் அதிகரித்து, ரூ. 26.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. குழுமத்தின் EBITDA (Earnings Before Interest, Tax, Depreciation and Amortisation) பெறுமதி ரூ. 10.8 பில்லியனாக பதிவாகியிருந்தது. அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25.7 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. மேலும் 2020 மூன்றாம் காலாண்டில் 37.1 சதவீதமாக தென்பட்ட EBITDA வரம்பு(EBITDA Margin) இவ்வருட மூன்றாம் காலாண்டில் 40.4 சதவீதமாக பதிவாகியிருந்தது.

2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2021 இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் வருமானம் 14 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 76.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சந்தைப்படுத்தல் உத்தியின் காரணமாக இந்த சாதனை சாத்தியமானது. வீடுகள் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கான அதிகரித்த ஃபைபர் இணைப்புகள் , PEO TV மற்றும் மொபைல் சேவைகளுக்கான தேவை அதிகரிப்பு போன்றவற்றின் பங்களிப்புடன், வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 9.2 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது 36.1 அதிகரிப்பாகும்.

2021 இன் முதல் 9 மாத காலப்பகுதியில், குழுமத்தின் மூலதன செலவீனம் ரூ. 18.2 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேசிய ஃபைபர் மயமாக்கல் திட்டத்தின் கீழ், துரிதப்படுத்தப்பட்ட ஃபைபர் விரிவாக்கம் ஊடாகவும், புதிய LTE base stations மற்றும் tow களில் முதலீடுகளை மேற்கொண்டிருந்தமை போன்றவற்றினூடாகவும் இலங்கையில் தரமான டிஜிட்டல் இணைப்புத்திறனை மேம்படுத்தும் குழுமத்தின் அர்ப்பணிப்பு முன்னேற்றத்தை பதிவு செய்திருந்தது. மேலும், புதிய 5G தொழில்நுட்பத்தினூடாக, இலங்கையர்களுக்கு மேம்படுத்தப்பட்ட அனுபவம் வழங்கப்படும். கடலுக்கடியிலான கேபிள் வலையமைப்பு மற்றும் உள்ளக போக்குவரத்து வலையமைப்பு போன்றவற்றில் குழுமத்தின் முதலீடுகள் உறுதியாக அமைந்திருப்பதுடன், தரத்தை மேம்படுத்தி, சேவை மட்டங்களை உயர்ந்த நிலையில் பேணுவதற்கு பங்களிப்பு வழங்குகின்றன.

முதல் 9 மாத காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துக்கான SLT குழுமத்தின் பங்களிப்பு மொத்தமாக ரூ. 15.1 பில்லியனாக பதிவாகியிருந்தது. இதில் நேரடி, மறைமுக வரிகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் பங்கிலாபங்களும் அடங்கியிருந்தன.

யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப்

## சிறந்த கௌரவிப்பு



ரொஹான் பெர்னாண்டோ – குழும தவிசாளர் – SLT



லலித் செனெவிரட்ன – குழும பிரதம நிறைவேற்று அதிகாரி - SLT



கித்தி பெரேரா – பிரதம நிறைவேற்று அதிகாரி - SLT



சந்திக விதாரன – பிரதம நிறைவேற்று அதிகாரி - Mobitel

இலங்கை காப்புறுதித் துறையில் கவர்ச்சிகரமான வெகுமதிகளை வழங்கும் மாபெரும் திட்டமான யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப், அதன் சிறந்த செயற்பாட்டாளர்களை கௌரவிக்கும் நிகழ்வை அண்மையில் கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது. உலகத் தரம் வாய்ந்த விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவையை வெளிப்படுத்தியிருந்த கம்பனியின் காப்புறுதி ஆலோசகர்களை கௌரவிக்கும் வகையில் இந்தக் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப்பைச் சேர்ந்த சிறந்த செயற்பாட்டாளர்களுக்கு வாழ்த்துகள். எமது செயலணியினரை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதிலும், வாடிக்கையாளரை மையப்படுத்திய சேவைகளை வழங்குவதிலும் நாம் கவனம் செலுத்தும் நிலையில், தொழிற்துறையில் எமது முதல் தொகுதி சாதனையாளர்கள் தமது நாமத்தை பதிவு செய்துள்ளதைக் காண்பதையிட்டு நான் மிகவும் பெருமை கொள்கின்றேன்." என்றார்.

கௌரவிக்கப்பட்ட சாதனையாளர்களுக்கு பரந்தளவு வாழ்க்கை முறை மற்றும் வியாபார ஊக்குவிப்பு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட அனுகூலங்களில் கம்பனியினால் எரிபொருள் வழங்கப்பட்டு பராமரிக்கப்படும் சொகுசு வாகனம் மற்றும் பண வெகுமதிகள் போன்றன அடங்கியிருந்தன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம விநியோக அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப் என்பது, சிறந்த சாதனைகள் மற்றும் உயர் வாடிக்கையாளர் சேவை மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய விற்பனைகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் ஆயுள் காப்புறுதி முகவர்களைக் கொண்ட உயர் க்ளப் ஆகும். ஆயுள் காப்புறுதித் துறையில் வழங்கப்படும் மிகவும் சிறந்த வெகுமதித் திட்டத்தினூடாக இந்த உலகத் தரம் வாய்ந்த விற்பனை அணிக்கு இந்த வெகுமதிகளை வழங்குவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். வியாபாரம் எனும் வகையில், எமது பிரதான இலக்கு என்பது, நாட்டினுள் ஆயுள் காப்புறுதியை வியாபிக்கச் செய்து, இலங்கையர்களின் கனவுகளை நனவாக்க பங்களிப்பு வழங்குவதாகும். இந்த கனவை நனவாக்கிடும் வகையில் எமது முன்னணி முகவர்கள் தமது பங்களிப்பை வழங்குவார்கள்." என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் ப்ரீமியர் க்ளப் சாதனையாளர்களில்: உபுல் பிரியந்த, சாமர மெண்டிஸ், ஹேரத் முதியன்செலாகே, சானக அப்புஹாமி, சந்துன் சிறிவர்தன, மலிந்த குருசிங்க, அமில ஹர்ஷன, நயோமி மீகஹாபொல, தரிந்து குருப்பு, ஜீவன் விஜேகோன், சுரேஷ் பண்டார, குமாரசிறி ராமநாயக்க, மஹேஷி பெர்னான்டோ, உபாலி விஜேசூரிய மற்றும் ரொஹான் விஜேவர்தன ஆகியோர் அடங்கியுள்ளனர். இந்த 16 அங்கத்தவர்களும் Million Dollar Round Table (MDRT) க்கு தகைமை பெற்றுள்ளனர்.

## மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# முன்னிலையில் இலங்கை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் முன்னிலையில் இலங்கை காணப்படுகின்றது.



இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் நேற்று ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையின் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இப்போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக துடுப்பாட்டவீரர் ஜெரெமி சொலொஸனோ அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை கருணாரத்ன, பதும் நிஸங்கவின் சத இணைப்பாட்டத்தில் நிதானமான ஆரம்பத்தைப் பெற்றது. பின்னர் 56 ஓட்டங்களுடன் நிஸங்க, ஷனொன் கப்ரியலிடம் வீழ்ந்தார்.

இதைத் தொடர்ந்து வந்த ஒஷாத பெர்னான்டோ, அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் றொஸ்டன் சேஸிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் அடுத்தடுத்து வீழ்ந்தனர்.

எனினும், அடுத்து வந்த தனஞ்சய டி சில்வா, கருணாரத்ன இணைப்பாட்டத்தில் நேற்றைய முதல்நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 267 ஓட்டங்களைப் பெற்று முன்னிலையில் இலங்கை காணப்படுகின்றது.

தற்போது களத்தில், கருணாரத்ன 132, டி சில்வா 56 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.

இந்நிலையில், கருணாரத்னவின் துடுப்பிலிருந்து சென்ற பந்தொன்று, துடுப்புக்கு அருகில் இடது பக்கம் நின்ற சொலொஸனோவின் தலைக்கவசத்தில் தாக்கியிருந்தது.

அந்தவகையில், களத்திலிருந்து படுக்கையில் தூக்கிச் செல்லப்பட்ட சொலோஸனோ, ஸ்கான்களுக்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்தார்.

## சென்னைக்காக தொடர்ந்து விளையாடவுள்ள டோணி?



இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காகக் குறைந்தது மேலும் ஒரு பருவகாலமாவது தொடர்ந்து விளையாடப் போவதாக இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் மகேந்திர சிங் டோணி கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.

சென்னையில் பிரியாவிடை ஒன்றை எதிர்பார்த்தே குறித்த கருத்தை 40 வயதான டோணி வெளிப்படுத்துள்ளார்.

சுப்பர் கிங்ஸின் தேவைகளைக் கருத்திற் கொண்டே தனது ஒய்வு குறித்த எந்த முடிவும் எடுக்கப்படும் என இவ்வாண்டு ஐ.பி.எல்லை சென்னை வென்ற பின்னர் அதன் தலைவராக டோணி குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையிலேயே, இந்தியாவில் வைத்து ராஞ்சியில் இறுதியாக இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியை விளையாடியதாகவும், அடுத்தாண்டோ அல்லது ஐந்து ஆண்டுகளிலோ என எனக்குத் தெரியாது, ஆனால் எனது கடைசி இருபதுக்கு-20 போட்டி சென்னையில் எனத் தான் நம்புவதாக டோணி தெரிவித்துள்ளார்.



## சாய்ந்தமருது மியன்டாட் கழக முத்து விழா நிகழ்வுகள்

நூருல் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகத்தின் 30 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட முத்து விழா நிகழ்வுகளும், வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மளிகைக்காடு வபா ரோயல் மண்டபத்தில் கழகத் தலைவர் ஏ. பாயிஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டமொழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரும், சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியும், இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல்.எம். சலீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டனர். மேலும் கௌரவ அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட பேராசிரியர் ஏ. றஸ்மி, விசேட அதிதிகளாக சட்டத்தரணி என்.எம்.ஏ. முஜீப், அல்- அமானா நற்பணி மன்ற தலைவர் ஏ.எல். அப்துல் பரீட், சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்க தலைவர் எம்.எம். உதுமாலெப்பை, கழக தவிசாளரும், தொழிலதிபருமான ஜே.எம். காலித் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

30 ஆண்டுகளாக இந்த கழகத்தின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்தவர்கள், இந்த கழகத்தின் உறுப்பினர்களாக இருந்து கொண்டு விளையாட்டில் சாதித்த வீரர்கள், சமூக சேவையில் ஈடுபட்டவர்கள் என பல்வேறு தரப்பினரும் அதிதிகளால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக நிரூபித்த வீரர்களுக்கும் வெற்றி கேடயங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# வட்ஃபோர்ட்டிடம் தோற்றது யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வட்ஃபோர்ட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-4 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.



யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை டொனி வான் டீ பீக் பெற்றார். வட்ஃபோர்ட் சார்பாக, ஜோஷுவா கிங், இஸ்மைலா சார், ஜோவா பெட்ரோ, இமானுவேல் பொனவென்ந்துரே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, லிவர்பூலின் மைதானத்தில் நடைபெற்ற ஆர்சனலுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் அவ்வணி வென்றது. லிவர்பூல் சார்பாக, சாடியோ மனே, டியகோ ஜோட்டா, மொஹமட் சாலா, தகுமி மினமினோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் செல்சி வென்றது. செல்சி சார்பாக, அந்தோனியோ ருடிகர், என்கலோ கன்டே, கிறிஸ்டியன் புலிசிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பாகிஸ்தான்

# ஆண்மை நீக்கம் வேண்டாம்; தூக்கில் இடுங்கள்

பாகிஸ்தானில் அண்மைக்காலமாக பாலியல் குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், அந்நாட்டு மக்கள் பாலியல் குற்றங்களுக்கு எதிரான தண்டனைகளைக் கடுமையாக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் முன்வைத்து வந்தனர்.



இதனையடுத்து அந்நாட்டு பாராளுமன்றத்தில் " தொடர் பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு ஆண்மை நீக்கம் செய்யப்படும்" என்ற புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டத்தின் மூலம், குற்றவாளிகளுக்கு ஊசி மூலம் மருந்து செலுத்தி ஆண்மை நீக்கம் செய்யப்படும் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் "ஆண்மை நீக்கம் செய்வது ஷரியத் சட்டங்களுக்கு எதிரானது என்றும், தூக்கில் இடுவதே சரியான தண்டனை எனக் கூறி இப்புதிய சட்டத்திற்கு பாகிஸ்தானின் எதிர்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## வான்கோழிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கிய பைடன்



"நன்றி தெரிவிக்கும் நாள்" என்பது ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கொண்டாடப்படுகின்ற ஒரு பாரம்பரியமான பண்டிகை ஆகும்.

இப்பண்டிகையானது தற்போதைய காலக்கட்டத்தில் அரசியல், சமூக, கலாச்சார,சமய முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் கொண்டாடப்படுகிறது.

குறிப்பாக இந்நாளில் அமெரிக்கர்கள் வான்கோழிகளை சமைத்து உண்ணுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இருப்பினும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருப்பவர்கள், நன்றி தெரிவிக்கும் நாளுக்கு முன்பு 2 வான்கோழிகளுக்கு மட்டும் பொதுமன்னிப்பு அளிப்பது அங்கு பாரம்பரியமாக பின்பற்றப்பட்டு வருகிறது.

அவ்வாறு பொதுமன்னிப்பு வழங்கப்படும் 2 வான்கோழிகள், நாட்டிலுள்ள உயிரியல் பூங்காக்களுக்கு பரிசாக அளிக்கப்படும். அந்த வகையில் இந்த ஆண்டு நன்றி தெரிவிக்கும் நாளை முன்னிட்டு 'ஜெல்லி' மற்றும் 'பீனட் பட்டர்' என பெயரிடப்பட்ட 2 வான்கோழிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்த சுவாரஸ்ய நிகழ்வு அங்கிருந்தவர்களிடையே கலகலப்பை ஏற்படுத்தியது.

அமெரிக்கா



## ஒட்சிசனை அளிக்கும் துணி

ஒட்சிசனை அளிக்கும் புதிய துணி ஒன்றைக் கண்டுபிடித்து அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.



OmniFiber என அழைக்கப்படும் இந்தத் துணியிலிருந்து உடலின் தேவைக்கு ஒக்சிசனை வேண்டிய அளவு எடுத்துக்கொள்ளலாம் எனவும், குறிப்பாக திடீரென ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளுக்கு இதன் மூலம் இலகுவாக ஒட்சிசனை வழங்கமுடியும் எனவும் ,விளையாட்டு வீரர்கள், மேடையில் நடனமாடுபவர்களுக்கு உதவிகரமாக இத் துணி இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்துணியை அணிந்து கொண்டால் உடலுக்கு நேரடியாக ஒட்சிசன் செல்லும் என்றும் விஞ்ஞானிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

இது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது

சூடான்



## சூடான் போராட்டத்தில் 40 பேர் உயிரிழப்பு

சூடானில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக மக்கள் நடத்தி வரும் போராட்டத்தில், மக்களைக் குறிவைத்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40ஆக உயர்வடைந்துள்ளது.

கடந்த மாதம் 25ஆம் திகதி ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனையடுத்து உலக நாடுகள் தமது கண்டனத்தை தெரிவித்து வந்ததோடு நாடு முழுவதும் ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், இராணுவத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தும் மக்கள் மீது கொடூரமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அந்தவகையில் இதுவரை உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## ஊதா நிறமாக மாறிய மகாராணியின் கைகள்

பிரித்தானியா விடுதலைக்காக உயிர் துறந்த படையினருக்கான நினைவேந்தல் கூட்டம் மகாராணியார் இரண்டாம் எலிசபெத் முன்னிலையில் நடைபெறுவது வழமை. எனினும் அவருக்கு உடல்நலம் சரியில்லை என்பதால் நினைவேந்தல் கூட்டத்தில் கலந்து கொள்வதை அவர் தவிர்த்தார்.

எனினும், வெளியாகியிருக்கும் புகைப்படத்தில் மகாராணியாரின் கைகள் ஊதா நிறத்தில் இருப்பது போல் தெரிந்துள்ளது. இம் மாறுதல்கள் பிரித்தானிய மக்களிடையே சந்தேகத்தை அதிகரித்துள்ளது.

போலந்து

## மூதாட்டியை திருமணம் செய்த இளைஞர்

போலந்தில் வசித்து வரும் ப்ரோமோ எனும் 83 வயதான மூதாட்டியை பாகிஸ்தானைச் சேர்ந்த 28 வயதான இளைஞர் ஒருவர் திருமணம் செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



பேஸ் புக் மூலம் நண்பர்களாகப் பழகிய இவர்கள் இருவரும் நாளடைவில் காதலர்களாக மாறியதாகவும், சுமார் 6 வருடங்களுக்கு மேலாக காதலித்து வந்த நிலையில் தற்போது திருமணம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த இளைஞருக்கு அவருடைய பெற்றோர்கள் 18 வயது நிறம்பிய பெண்ணொருவரை திருமணம் செய்து வைக்க முடிவு செய்ததாகவும், எனினும் அவர் ப்ரோமோவையே திருமணம் செய்து கொள்வேன் என்று அடம் பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> இளம் பெண்ணொருவரை திருமணம் முடித்துவைப்பதற்கு வீட்டார் தீர்மானித்திருந்த நிலையிலேயே இவ்வாறான முடிவை அவர் எடுத்துள்ளார்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 22 நவம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.